பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 08 வியாழக்கிழமை 24.07.2025 கதிர் 257



## இனிது ரகசியம் அல்ல!

'பிரமிட்' நிதித் திட்ட நிறுவனங்கள் மீது அண்மைய நாட்களாக சட்ட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட காலமாகவேமத்தியவங்கிஇந்தத் ☞ 2

## வாகன இறக்குமதிக்கு மட்டுப்பாடு ஏதுமில்லை

### மத்திய வங்கி அறிவிப்பு

வாகன இறக்குமதி தொடர்பில் மட்டுப்பாடுகளை விதிப்பதற்கான எந்தவொரு தீர்மானமும் மத்திய வங்கியினாலோ அல்லது ஆளும் தரப்பினாலோ மேற்கொள்ளப்படவில்லைஎனவும்,வாகனஇறக்குமதி நடவடிக்கைகளுக்கான சந்தை திறந்திருக்கும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாணயச்சபையின் தீர்மானங்களக அறிவிக்கும் நோக்கில் நேற்று புதன்கிழமை இலங்கை ☞ 6

## திருகோணமலை, முத்துநகரில் காணிகளை இழந்த குடும்பங்களுக்கு நீதி செய்யுங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

திருகோணமலை முத்து நகர் விவசாய நிலத்தில் 53 வருடங்களாக பயிர்செய்கை மேற்கொண்ட, 1000 குடும்பங்களின், 800 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டு அரச அனுசரனையுடன் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தகரவேட்டவொன், மத்தியவெளி, முத்து நகர் ஆகிய மூன்று கிராமங்களையும்சேர்ந்த1000குடும்பங்கள், 53 வருடங்களாக, 1972 ஆம் ஆண்டு முதல் 800 ஏக்கர் காணியில் நெல், ☞ 2

# வவுனியா வடக்கில் தமிழர் நிலம் மீதான ஆக்கிரமிப்பு தொடர்கிறது

## என்.பி.பி ஆட்சியிலும் எதுவும் மாறவில்லை சத்தியலிங்கம் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

வவுனியா வடக்கில் உள்ள தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்த நிலங்கள் ஆக்கிரமிக்கப்படும் நிலைமைகள் தொடர்ந்துகொண்டு இருப்பதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமைஇடம்பெற்றவேலையாட்களின் வரவுசெலவுத்திட்டநிவாரணப்படிதிருத்த சட்டமூலம்மற்றும்வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில்உரையாற்றுகையிலேயே இதனைத்தெரிவித்தார்.அவர்மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வெடிவைத்தகல்லு கிராம அலுவலர்பிரிவு தமிழ் மக்கள் பூர்வீகமாகவாழ்ந்து வந்தபாரம்பரிய பிரதேசம். இங்குள்ள மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம்.

1983காலப்பகுதியில்ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் அதனைதொடர்ந்துநடைபெற்ற ☞ 2

### புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ்

## பாரம்பரியப் பரீட்சைக்கு மாற்றாக தொகுதி முறை மதிப்பீடு அறிமுகம்

### பிரதமர் ஹரினி விளக்கம்

கல்வியை அளவிடும் பாரம்பரியப் பரீட்சை முறைக்கு மாற்றாக, தொகுதி முறை (module) கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் ஹரினி தெரிவித்தார்.

இதன் முக்கிய நோக்கம் மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து, நேற்று பத்தரமுல்லை இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான ☞ 2

## செம்மணியில் பெருகுகிறது எண்ணிக்கை நேற்றும் 5 எலும்பு எச்சங்கள் அடையாளம்

### இதுவரையில் மொத்தம் 85

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்றுப் புதன்கிழமை 05 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் காப்பு போன்ற வளையமும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களில் மட்டும் 20 மனித மனித எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 2 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் ஜீலை 21 முதல் மீண்டும்அகழ்வுப்பணிகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் முதல் நாளில் 7 மனித மனித எச்சங்களும் இரண்டாம் நாளில் 8 மனித எலும்பு எச்சங்களும் மூன்றாவது நாளான நேற்று 5 எலும்பு எச்சங்களும்

செம்மணி மனிதப் புதைகுழியின் ☞ 6

## கறுப்பு ஜீலை வரலாற்றை மறைக்க முயலாமல் அதனை பொதுத் தினமாக அறிவிக்கவேண்டும்

### நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

கறுப்பு ஜீலை வரலாற்றை மறைக்க முயலாமல் அதனை அனைவரும் அனுஷ்டிக்கும் பொதுவான தினமாக அறிவிக்கஆளும்தரப்புநடவடிக்கைஎடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவதத்தில் கலந்துகெ ண்டுஉரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் இன்றைய ☞ 6

## பிரதம நீதியரசராக சூரசேனவை அரசமைப்பு பேரவை அங்கீகரிப்பு

அடுத்த பிரதம நீதியரசர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த உயர் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேனவை அரசமைப்பு பேரவை ஏகனமதாக அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கஅரசியலமைப்பு பேரவைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேனவின் பெயரை பரிந்துரைத்திருந்தார்.

இந்நிலையில்நேற்றையதினம்சபாநாயகர்ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அரசியலமைப்பு பேரவை கூடியது.

இக்கூட்டத்தின் முதல் விடயமாக அடுத்த பிரதம நீதியரசர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புகின்ற விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஜனாதிபதியின் பரிந்துரை ☞ 2

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மோசடிகளை விசாரிக்க அரச தலைவர் குழு நியமனம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனங்களில் நடந்த மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரிக்க அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழுவை அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து துரிதமாக விசாரணையைநடத்தவும்எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான வழிகாட்டுதல்கள் அடங்கிய ☞ 6

## தேசபந்துவை பதவி நீக்க நாடாளுமன்றில் விவாதம்

### சபாநாயகர் அறிவிப்பு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரை பதவி நீக்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் ஜகத் ☞ 6

## இனி இது .....

திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த முனைந்து வந்தது. ஆனால், அதனால் பயன் ஏதும் கிட்டவில்லை. இதன் விளைவாக தற்போது அந்த நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலங்கைச் சட்டங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாகப் பதிவு செய்துகொண்ட நிறுவனங்களே சட்டவிரோதமாக வேறு வடிவங்களில் இந்தப் ‘பிரமிட்‘ திட்டங்களையும் மேற்கொள்கின்றன. இதனால் அத்தகைய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக்கு எதிராகத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்தகைய வழக்கு ஒனன்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. பொது நிதியை சேகரித்து ரூ.200 பில்லியனுக்கும் அதிகமாக மோசடி செய்ததாகக் கூறப்படும் சட்டவிரோத ‘பிரமிட்‘ திட்டமான ஒன்மக்ஸ் டிரி (நுஜதுழிமும்வீ) இன் வழக்கு அது. இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு எதிராக ஏற்கனவே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு எதிராக மட்டுமன்றி அதன் இரண்டாவம் மூன்றாம் நிலைத் தலைவர்களைக் கைது செய்யது அவர்களையும் எதிராளிகளாக இந்த வழக்கில் சேர்த்துக்கொள்வதற்கான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்த இரண்டாம் மட்டத் தலைவர்களின் பெயர்கள், கிராமங்கள் மற்றும் அவர்களின் விவரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்கள் வைப்பாளர்களால் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த ஆவணங்கள் மூலம் சந்தேகநபர்களை அடையாளம் காண மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

வடக்கில் இத்தகைய பிரமிட் திட்டங்களை ஊக்குவித்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரும் அரச உயரதிகாரி ஒருவரும் முக்கியமானவர்கள். புனர்வாழ்வு பெற்று வெளியாகிய முன்னாள் போராளிகள் பலருக்கும் பணம் உழைப்பதற்கான இலகு வழி என்று கூறி அவர்களை இந்த சட்டவிரோதத் திட்டத்திற்குள் வழிநடத்தியிருந்தார் அந்த மருத்துவர். அதேபோன்று தான் உயரதிகாரியாகக் கடமையாற்றிய மாவட்டத்தில் பலரையும் இந்தத் திட்டத்திற்குள் உள்ளீர்த்துவிட்டவர் அந்த அரச உயரதிகாரி. அவர் தற்போதும் என்பிபி ஆளும் தரப்பின் அமோக ஆதரவோ அரச உயர் பதவியை அலங்கரித்து வருகின்றார். இருவருக்கும் லட்சக்கணக்கில் அரசசம்பளம் கிடைத்தபோதும் தனக்கு அல்லது மகன், மகள், மனைவி போன்ற யாரோ ஒரு உறவினருக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பெரும் வருவாய் கிடைத்த காரணத்தால் அவர்கள் இந்தத் திட்டத்திற்குள் அப்பாவிகளை இழுத்துவிட்டு அவர்களின் பணத்தை ஏப்பம் விட்டார்கள்.

தற்போதைய விசாரணைகள் அந்த சட்டவிரோத நிறுவனங்களின் இரண்டாம், மூன்றாம் நிலைத் தலைவர்களை மட்டுமன்றி இப்படித் தமது பதவி நிலைகளையும் துஸ்பிரயோகம் செய்து இந்த நிறுவனங்களுக்கு ஊடாக பெரும் தொகைப் பணத்தை மோசடி செய்தவர்களையும் நோக்கிப் பாயவேண்டும். அப்போதுதான், மற்றொரு நிறுவனத்தின் பெயரில் இவர்களே இந்த சட்டவிரோத திட்டங்களைச் செயற்படுத்துபவர்களாக மாறாதிருப்பார்கள்.

கடந்தகாலங்களில் மத்திய வங்கி இத்தகைய நிறுவனங்களின் மீது சட்ட நடவடிக்கைகளை எடுக்க முற்பட்ட வேளைகளில் எல்லாம், அவர்கள் புதிய நிறுவனங்களைத் திறந்து அவற்றின் ஊடாக அதே ‘பிரமிட்‘ திட்டத்தைச் செயற்படுத்தித் தமது மோசடிகளை அரங்கேற்றினார்கள். இனியும் அத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடரக்கூடாது என்றால் அந்த நிறுவனங்களின் ஆணிவேர் வரை பிடுங்கப்படவேண்டும். அதற்கு தமது அரச பதவிகளைத் துஸ்பிரயோகம் செய்து அப்பாவிகளிடம் மோசடி செய்தவர்களையும் தண்டிப்பது அவசியம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசம்பாவிதங்கள் காரணமாக அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் குடியேறியிருந்தனர்.

இதனால் நீண்ட காலமாக அங்கிருந்த தமிழ்மக்களுக்கு சொந்தமான விவசாய நிலங்கள் பயிர் செய்யப்படாது பராமரிப்பின்றி இருந்தது.

‘திரிவச்சகுளம்’; வெடிவைத்தகல்லு கிராமம் தமிழ்மக்களால் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த மூன்று சந்ததிக்கு முற்பட்ட வரலாற்றை கொண்ட கைவிடப்பட்ட குளமும் ஏறத்தாள 150 ஏக்கரிற்கு மேற்பட்ட வயற்காணிகளையும் கொண்டது.

இறுதி போரிற்குப் பின்னராக மக்கள் மீள்குடியேறிய நிலையில் காணி சொந்தக்காரர்கள் சிலர் 2019 காலப் பகுதியில் தமது மூதாதையரின் காணிகளை பயிச்செய்கைக்காக துப்பரவு செய்தபோது வனப் பாதுகாப்பு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காணி உரிமையாளர்கள் தமது காணிக்குள் செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டிருந்தது. 5 வருடங்கள் நீடித்த வழக்கு 2024 இல் போதுமான ஆதாரங்களை வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனாலும் இந்த காலப்பகுதியை தமக்கு சாதகமாக்கி கொண்ட அயற்கிராமத்தில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மையின விவசாயிகள் மகாவலி அதிகார சபையின் துணையுடன் குத்தகை அடிப்படையில் தமிழ் மக்களால் துப்பரவு செய்யப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் 10 விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தற்போது 25 குடும்பங்களாக அதிகரித்துள்ளதுடன், நெடுங்கேணி கமநலசேவைகள் நிலையத்தில் ‘அந்தரவெவ கமக்காரர் அமைப்பு’ என்று பதிவு செய்துள்ளனர்.

வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர்களுக்கு காணிக்குள் செல்வதற்கு தடைவிதித்துள்ள காலப்பகுதியில் எவ்வாறு மகாவலி அதிகாரசபை அந்தக் காணிகளை குத்தகைக்கு வழங்கமுடியும்?

புதிய பெயரில் கமக்கார் அமைப்பாக பதிவு செய்யமுடியும் என்றால் இதற்கு அரச அதிகாரிகளும் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஓரிரு மாதங்களிற்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் 200 ஏக்கரிற்கு அதிகமான பிரதேசம் திட்டமிட்ட வகையில் காடழிப்பு செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ள மக்களின் தகவலின்படி சுமார் ஒன்றரை மாதங்களிற்கு மேலாக 5 டோசர்களும் 2 ஜே.சீ.பி இயந்திரங்களும் காடழிப்பில் ஈடுபட்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் தமது விவசாயத் தேவைக்காக வேலி அடைப்பதற்காக தடிகளை வெட்டினால் சிறையில் அடைக்கும் வனப்பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு ஒன்றரை மாதங்கள் அதுவும் பெரும் இயந்திரங்களைக் கொண்டு காடழிப்பு செய்யப்பட்டமை தெரியாது போனமை ஆச்சரியமாக இருக்கின்றது.

அத்துடன் தற்போதைய விலைவாசியில் ஒரு ஏக்கர் காணி துப்பரவாக்குவதற்கே குறைந்தது ரூபா ஒரு இலட்சம் தேவைப்படுமென்றால் 200 ஏக்கரிற்கு மேற்பட்ட காடுகள் துப்பரவு செய்வதற்கு எத்தனை மில்லியன் தேவைப்பட்டிருக்கும்?

அப்படியென்றால் இதனை சாதாரணமாக பொதுமக்களால் செய்யமுடியுமா? இதன் பின்னணியில் யார் உள்ளார்கள்? அரச நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த பிரதேசத்திற்கு சென்று விசாரித்ததில் இந்தக் காடழிப்பு பற்றி பொலிஸாரோ வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரோ அறிந்திருக்கவில்லை என்றுகூறப்பட்டது. இதனை நம்பக்கூடியதாக உள்ளதா? ஆக தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு கொள்கைளில் உங்கள் ஆட்சியிலும் எந்தவிதமான மாற்றத்தையும் காணவில்லை என்றார்.

## பாரம்பரியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழிப்புணர்வு நிகழ்வில் பிரதமர் இதனைக் கூறினார்.

புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய விளக்கங்கள் இந்த சீர்திருத்தம் குறித்த விளக்கங்களை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி அசோக டி சில்வா ஆகியோர் ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களுக்கு வழங்கினர்.

பின்னர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த பிரதமர், பல்வேறு முக்கிய விடயங்களை தெளிவுபடுத்தினார்.

### கற்றல் மற்றும் மதிப்பீட்டில் மாற்றம்

’ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகும் முறைக்கு நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த தொகுதி முறையில் பல்வேறு செயல்பாடுகளின் மூலம் கற்றுக்கொள்ளவும், மதிப்பீடு செய்யப்படவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன,’ என்று பிரதமர் விளக்கமளித்தார்.

### க.பொ.த சாதாரண தரப் பரீட்சை

புதிய பாடத்திட்ட வழிகாட்டுதலின்படி, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2029 ஆம் ஆண்டிலேயே நடத்தப்படும்.

### அமுலாக்கத்தின் தொடக்க நிலை

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தத்தின் கீழ், 1 ஆம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு மட்டுமே புதிய கல்வித் திட்டம் கற்பிக்கப்படும். இந்த சீர்திருத்தத்தைக் கண்காணிக்க மூன்று ஆண்டுகள் அவகாசம் இருப்பதால், எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யப் போதுமான கால அவகாசம் இருப்பதாகவும், சீர்திருத்தம் இறுதியானது என்று கூற முடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். மேலும், இந்த சீர்திருத்தம் குறித்த கருத்துக்களையும் பரிந்துரைகளையும் முன்வைக்க ஊடகவியலாளர்களுக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

### வகுப்பறை மாணவர் எண்ணிக்கை

ஒரு வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 25 - 30 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே இலக்கு. தற்போது 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் வகுப்பறைகள் உள்ளன. கல்வி அமைச்சர் மற்றும் செயலாளரின் உத்தரவின்படி அதிக மாணவர்களை வகுப்பறைகளுக்குள் உள்வாங்கும் முறை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை மட்டுமே உள்வாங்கப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு செய்வதற்கு முன், பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை முதலில் நீக்க வேண்டும் என்றும், இது உடனடி செய்யக்கூடிய காரியமல்ல என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். புலமைப்பரிசில் பரீட்சையால் மாணவர்களுக்கு ஏற்படும் அழுத்தத்தைக் குறைத்து, கல்வி முறையின் சுமையைக் குறைப்பதே சீர்திருத்தத்தின் நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### முன்பள்ளிப்பருவவளர்ச்சிமையங்கள்

முன்பள்ளி குழந்தைப் பருவ வளர்ச்சி மையங்களை நடத்துவது மற்றும் அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்த முழுமையான கண்காணிப்பை கல்வி அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த சீர்திருத்தம் பரிந்துரைப்பதாக பிரதமர் கூறினார்.

### ஆசிரியர் பயிற்சிக்கு முக்கியத்துவம்

இச்சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவித்த கல்விப் பிரதி அமைச்சர் மதுர சேனவிரத்ன, ஆசிரியர் பயிற்சிக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். முன்மொழியப்பட்ட ஐந்து தூண்களிலும் ஆசிரியர் பயிற்சி உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் ஆசிரியர் பயிற்சிப் பாசறைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், இந்த சீர்திருத்தம் தொடர்பாக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் கல்வித் துறை சார்ந்தோர் போன்ற சமூகத்தினர் மத்தியில் பாரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## திருகோணமலை,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோளம், வெண்டைக்காய், தர்பூசணி மற்றும் பேரிச்சை போன்றவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

2023 ஆண்டு முதல் பயிர்செய்கையில் ஈடுபட்டுவருவோருக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய 2025 பெப்ரவரி மாதத்திலிருந்து 53 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்த விவசாயிகள் பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது விவசாய நிலங்களுக்கு காணி உறுதிப் பத்திரம் கோரியிருந்த போதிலும், அதனை வழங்காது விவசாயிகளை வெளியேற்றி, இந்தப் பயிர் செய்கை நிலத்தில் 200 ஏக்கர் காணியை பெற்றுக் கொடுத்து, அதில் சூரிய மின் சக்தி உற்பத்திநிலையமொன்றைநிறுவநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 53 வருடங்களாகப் பயிர் செய்து வந்த விவசாயிகள் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இந்த காணிக்கான உரிமை விவசாயிகளுக்கே காணப்படுகின்றது. சூரிய மின் சக்தியை ஊக்கவிக்க வேண்டும்தான், ஆனால் சூரிய மின்கல சேமிப்புகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையை ஆளும்தரப்பு குறைத்துள்ள சந்தர்ப்பத்தில், இந்த சூரிய மின் சக்தி திட்டத்திற்கு இடத்தை ஒதுக்கி, விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவது மோசமான விடயம்.

இந்த விவசாயிகள் பல்வேறு அரசாங்கங்களில் இருந்து உர மானியங்கள், விவசாய கடன்கள் போன்றவற்றையும் பெற்றுள்ளனர். கடந்த தேர்தல் காலத்தில், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்கத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விவசாய நிலங்களைப் பாதுகாப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். தகரவேட்டவொன் குளம், கடலாஞ்சி குளம், சின்ன நானா குளம், முத்து நகர் குளம் என 4 குளங்கள் இப்பிரதேசங்களில் அமைந்து காணப்படுகின்றன.

இந்தக் குளங்களை புனரமைப்பதற்கு கூட அரச நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 53 வருடங்களாக பயிர்செய்கை மேற்கொண்ட, 1000 குடும்பங்களின், 800 ஏக்கர் காணியை ஒரு கையெழுத்தால் அபகரித்து, தற்போது வரையில் இரு சூரிய மின் சக்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த கம்பெனிக்காரர்கள் விவசாயிகளை பொலிஸிக்கு அழைத்துச் சென்று பயமுறுத்தியுள்ளனர்.

அடுத்த போக விவசாய நடவடிக்கைகளை இந்த விவசாயிகளால் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால், இவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மீதமுள்ள காணிகளுக்கான உரிமங்களை இவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டும். நீர்ப்பாசன வடிகாலமைப்பு வசதிகளுடன் கூடிய மாற்று இடமொன்றை பெற்று கொடுக்கவேண்டும். இந்த விளைநிலங்களை அபகரிக்கக்கூடாது. நிறுவனங்கள் தங்கள் நிதிப் பலத்தையும், ஏனைய பலங்களையும் பயன்படுத்தி இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

விவசாயிகள் முன்வைத்த விடயங்களின் பிரகாரம், 1972 முதல் இந்த காணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2023 முதலே இந்த விவசாய காணிகளுக்கு பாதகம் விளைவிக்கும் சூழ்நிலை உருவாக் கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையை முன்வைக்கும்போது, ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இந்தப் பிரச்சினையை முன்வைப்பதைத் தடுத்து அவருக்கு தடைகளை ஏற்படுத்தி வந்தனர்

## பிரதம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை அரசமைப்பு பேரவையின் அங்கத்தவர்கள் ஏகமனதாக அங்கீகரித்தார்கள்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாமில் சிரஷ்டத்துவம் மிக்கவரான நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன, முன்னர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டிருந்தார்.

அத்துடன், அவரது தொழில்வாண்மைக்

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சகோதரத்துவ தினங்கள் அல்ல: அரசியல் தீர்வே அமைதிக்கான பாதை

**இலங்கையில் பல ஆண்டுகளாக நிலவிய இனப்பிரச்சனைகள், தமிழர் சமூகத்தின் நீண்டகால அரசியல் கோரிக்கைகள், ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் மற்றும் அகதிகளாக மாற்றப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் – இவையனைத்தும் ஒரு அடிப்படைக் கேள்வியையே முன்வைக்கின்றன: நாம் உண்மையில் அமைதியை விரும்புகிறோமா?**

**தரிசனமானபதில்கள், வாராந்தநறுமணவிழாக்கள், ‘சகோதரத்துவ தினம்’ எனப்படும் ஒரு மாதிரித் திருவிழாக்கள் – இவை அனைத்தும் உண்மையான அரசியல் தீர்வுக்கு பதிலாக அழகான வார்த்தைகளால் மூடிய நோய்களுக்கு சமமாகின்றன. இதுபோன்ற நிகழ்வுகள், அமைதி மற்றும் ஒற்றுமையை வெளிப்படையாக பேசினாலும், நிஜத்தில், பலத்த அடக்குமுறைகள், பாகுபாடுகள் மற்றும் தீர்வின்றி நிலவி வரும் மைய அரசியல் நிலைகளை மறைக்கும் முயற்சிகளாகவே பார்க்கப்படுகின்றன.**

**இலங்கையில், 2009ஆம் ஆண்டில் ஆயுதக்கொந்தளிப்பு முடிவடைந்ததையடுத்து, ’யுத்தம் முடிந்தது’ என்ற அரசாங்க வாதம், உண்மையான அமைதி நிலவுகிறது என்ற பொதுவான காட்சியை உருவாக்க முயன்றது. ஆனால், யுத்தம் முடிவடைந்ததோடே சமாதானமும் வந்துவிட்டது என்பது ஒரு அபாயகரமான பாசாங்கு ஆகும். யுத்தத்தின் இறுதி கட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள், விசாரணையற்ற கைதுகள், காணாமல் போனவர்கள், நிலம் மீட்பு பிரச்சனைகள், மொழிப் பாகுபாடுகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சந்தாத்களில் சம உரிமை இல்லாமை – இவை அனைத்தும் இன்னும் தீரவில்லை.**

**இன்னும் பல அரசியல் தீர்வுகள் அலமாரிகளில் தூசிபடுந்து கைவிடப்பட்டிருக்கின்றன. 13ஆம் திருத்தச் சட்டம், மாநில சுயாட்சி, உரிய அதிகாரக் கையளிப்பு ஆகியவை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. நிரந்தர அமைதிக்கான வாயிலாக இருப்பவைகளே, பல ஆண்டுகளாக அரசியல் களத்தில் நையாப்புடை போடப்பட்டிருக்கின்றன.**

**இந்நிலையில், வருடந்தோறும் நடத்தப்படும் சகோதரத்துவ தினங்கள், நினைவுகள் மற்றும் உணர்வுகளைத் திசை திருப்பும் முயற்சிகளாகவே மாற்றப்பட்டுள்ளன. உண்மையில் அமைதி என்பது ஒரு மனநிலையை ஏற்படுத்தும் செயல்முறையாக இருக்க வேண்டும். அதற்கு அடிப்படை அரசியல் தீர்வே ஆகும்.**

**ஒரு தேசத்தில் பல இனங்கள் வாழும்போது, அவர்களின் தனித்துவங்களை அங்கீகரிப்பதும், அரசியல், மொழி, பண்பாட்டு உரிமைகளை உள்வாங்கியும், சமவிகிதமான அதிகாரப் பகிர்வையும் உறுதி செய்தல் மிகவும் முக்கியமானது. இதுதான் நிலையான அமைதியின் ஆதாரக் கல்லாகும்.**

**ஆனால், இவை பேசப்படுவதற்குப் பதிலாக, வெறும் சொற்பொழிவுகள், ஊடகக் காணொளிகள், நாடகமயமான நிகழ்ச்சிகள், வானொலி பாடல்கள் என்பவற்றில் அமைதி ஒரு மாதிரியான விழா நிகழ்வாக மாற்றப்பட்டுள்ளது. இது முழுமையான மோசடியாக திகழ்கிறது.**

**நமது நாட்டில், யாரும் மீண்டும் ஆயுதம் எடுக்கக் கூடாது. ஆனால், அதற்கு அடிப்படை, நீதியும் சமத்துவமும் கொண்ட ஒரு அரசியல் சூழலை உருவாக்குவதே ஆகும். நியாயமற்ற சூழலில் அமைதியை நிலைநிறுத்த முடியாது. மேலும், நாடாளுமன்றத்தில் சுயாதீனக் குரல்களுக்கு இடமளிக்காமை, நீதிமன்றங்களில் நீதி தேடுவோருக்கு நம்பிக்கையின்றி இருத்தல், ஊடகங்களை கட்டுப்படுத்தும் முயற்சிகள் – இவை அனைத்தும் அமைதிக்கான பாதையைத் தடுக்கும் தீவிர நடவடிக்கைகளே ஆகும்.**

**இன்றைய அரசியல்வாதிகள் உண்மையாகவே அமைதியை விரும்புகிறவர்களாக இருந்தால், அவர்கள் ஒருபோதும் ’நாம் சகோதரர்கள்’ என மேடைகளில் பேசுவதைக் கடந்து, ’நாங்கள் உங்களுக்கு உங்கள் உரிமைகளை வழங்க தயாராக இருக்கிறோம்’ என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதன் வழியாகத் தான் மீள ஒற்றுமையும் ஏற்பட முடியும்.**

**அதற்காக நடைமுறை முயற்சிகள், அரசியல் அழுத்தங்களை எதிர்கொள்ளும் துணிவு, மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் தீர்மானங்கள் ஆகியவை தேவை. இல்லையெனில், சகோதரத்துவ தினங்கள் வெறும் பொய்த்தீமழையாகவே மறையப்போகின்றன.**

**அமைதி என்பது கொடுக்கப்பட வேண்டியது அல்ல, அது உரிமையாகக் கிடைக்க வேண்டியது. இதனை உணர்ந்து, அரசியல் தீர்வுகளை முன்னிலைப்படுத்தும் தைரியம் அரசியல்வாதிகளிடம் வரும்வரை, உண்மையான அமைதி எப்போதும் கனவாகவே தொடரும்.**

# அரகலய போராட்டத்தை கட்டுப்படுத்த ரணில் அறிவித்த அவசரகால விதிகள் சட்டவிரோதமானவை என அறிவிப்பு

## உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

*‘அரகலய‘ போராட்டத்தை கட்டுப்படுத்த பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் அப்போதைய அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் 2022 ஜூலை 17 ஆம் திகதி 2288/30 ஆம் இலக்க வர்த்தமானி ஊடாக பிறப்பிக்கப்பட்ட அவசரகால விதிமுறைகள் தன்னிச்சையானவை என்றும் அவை சட்ட விரோதமானது எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*அவசர கால சட்டத்தை அமுல் செய்ததன் ஊடாக முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் இதன்போது நீதிமன்றம் தீர்மானித்தது.*

*அரசுத்தலைவர்க்கு பதிலாக சட்டமா அதிபர், அப்போதைய அரசுத் தலைவர் செயலாளர் காமினி செனரத், அதன் பின்னர் அரசுத்தலைவர் செயலரான சமன் ஏக்கநாயக்க, அப்போதைய பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, அப்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு தாக்கல் செய்யப்பட்ட 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் தீர்ப்பை அறிவித்தே உயர் நீதிமன்றம் மேற்படி விடயத்தை அறிவித்தது.*

*பிரதம நீதியரசர் முர்து பெர்ணான்டோவின் இணக்கத்துடன் உயர் நீதிமன்ற நீதியர்சர் யசந்த கோதாகொட இந்த 66 பக்க தீர்ப்பை அறிவித்தார்.*

*எவ்வாறாயினும் 26 பக்கங்களை உடைய தீர்ப்பொன்றினை எழுதியுள்ள வழக்கை விசாரித்த மூவரடங்கிய நீதியர்சர் குழாமின் நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர, குறித்த அவசரகால சட்டம் சட்ட விரோதமானது அல்ல என தீர்ப்பறிவித்துள்ளார்.*

*பெரும்பான்மை நீதியரசர்களின் தீர்மானம் படி முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் அமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையான ‘சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள், அவர்கள் சட்டத்தினால் சமமாக பாதுகாக்கபப்டுவதற்கு உரித்துடையவர்கள்’ என்ற நாட்டு மக்களின் அடிப்படை உரிமயை மீறியுள்ளதாக தீர்ப்பறிவிக்கப்பட்டது.*

## மின்சார சபை திருத்தச் சட்டமூலத்தில்

# சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி அமைச்சர் தன்னிச்சையான செயற்பாடு

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

*ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்த மின்சாரசபை திருத்த சட்ட மூலத்தையே தற்போதைய ஆளும்தரப்பும் முன்வைத்துள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் நிறைவேற்ற வேண்டிய உள்ளடக்கங்களை மின்சக்தி அமைச்சர் தன்னிச்சையாக நிறைவேற்ற முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.*

*கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றஊடகவியலாளர்மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*நாடாளுமன்றத்தில் இலங்கை மின்சார சபை திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இயலாமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபை உள்ளிட்ட பல முக்கிய தரப்பினரை அழைத்து இந்த சட்டமூலத்தில் காணப்பட்ட சிக்கலான விடயங்களை நிவர்த்தி செய்து கொடுத்துள்ளோம்.*

*இதன்போது இரு காரணிகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே செயல்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானமும் எடுக்கப்பட்டது. ஆனால் தற்போதுள்ள மின்சக்தி அமைச்சர் தன்னிச்சையாக அவரது விருப்பத்துக்கமைய இந்த சட்டம் மூலத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.*

*2024இல் காஞ்சன விஜயசேகர சமர்ப்பித்த அதே சட்டமூலத்தையே தற்போதைய அரசாங்கமும் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தொழிற்சங்கங்கள் கால அவகாசம் கோரியும் 7 மாதங்கள் கடந்தும் அமைச்சர் அவர்களை சந்திக்க தயாராக இல்லை. இவர்களது இயலாமையால் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர்.*

*நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறை ஒழிக்கப்படும் எனக் கூறிய ஆளும்தரப்பு தற்போது அது தொடர்பில் எதனையும் கூறுவதில்லை. நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமை நீக்குவதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளும் முழுமையான ஆதரவை வழங்கும். ஆனால் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றார்.*

# ஜே.ஆர், மகிந்த விட்ட தவறுகளையே அநுரவும் விடுவாரானால் தமிழருக்கு சுயநிர்ணயத் தீர்வு

## சபையில் சிறீதரன் எம்.பி. உரை

அரசியல் ரீதியாக புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதனை இன்னும் முன் வைப்பதற்கான தயார் நிலையில் ஆளும்தரப்பு இல்லை. ஜே .ஆர்.ஜெயவர்த்தன, மஹிந்த ராஜபக்ச விட்ட தவறுகளை தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார தனது பலத்தைப் பயன்படுத்தி தானும் விடுவாரானால் நாடு, தான் விரும்பும் திசையில் தமிழர்களுக்கான ஒரு தீர்வு நோக்கியே பயணிக்கும். அது தமிழர்களுக்கான சுய நிர்ணய தீர்வாக அமையுமென தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய நாள் இலங்கை வரலாற்றில் முக்கியமான நாள். இந்த நாட்டில் ஜூலை இனப்படுகொலை நடந்து 42 வருடங்களாகிவிட்டன. ஜே .ஆர். ஜெயவர்த்தன தலைமையில் லலித், காமினி திசாநாயக்க போன்றவர்களின் வழிகாட்டலில் தமிழர்கள் மீது மிக மோசமான இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. வெலிக்கடை சிறையிலிருந்த குட்டிமணி, தங்கதுரை,ஜெகன் உட்படப் பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள் பிறக்கப்போகின்ற தமிழீழத்தை பார்க்கவா போகின்றீர்கள் எனக்கேட்டு அவர்களின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன.

ஜூலை 23 தமிழர்களின் வரலாற்றில் ஒரு கறுப்பு நாள். 42 வருடங்கள் கடந்தும் எந்தவிதப் பொறுப்புக்கூறலும் இல்லாமல், நீதி இல்லாமல் .விசாரணைகள் இல்லாமல் இருக்கின்ற இந்த நேரத்தில் அதனை நான் பதிவு செய்கின்றேன். இந்த நாட்டில் எந்த ஆளும்தரப்பு வந்தாலும் இதற்கு ஒரு மன்னிப்புக் கோரலையோ நீதியான விசாரணைகளையோ பரிகரத்தையோ தேட முற்படவில்லை.

1984 -03 11 ஆம் திகதி இந்தியாவிலிருந்த வெளிவந்த “சண்டே“ என்ற ஆங்கில சஞ்சிகை ஆசிரியர் அனிதா பிரதாப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் 30 வயது நிரம்பிய தலைவரான பிரபாகரன் “ஜே.ஆர். ஒரு உண்மையான பௌத்தராக இருந்திருந்தால் நான் ஆயுதம் தூக்க நேர்ந்திருக்காது “ என்று கூறினார்.

எமது மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. நாம் தொடர்ந்தும் நீதிகேட்டு போராடுகின்ற இனம். இந்த நாட்டின் தற்போதைய அரசுத் தலைவராக இருக்கின்ற அநுரகுமார ஒரு மண்குடிசையிலிருந்து இந்த நாட்டின் அரசுத் தலைவராக மாளிகை வரை வந்தவர். அம்மா சுட்டுக்கொடுத்த பலகாரங்களை ரயில்களில் விற்று சாதாரண பிரஜையாக வாழ்ந்து அரசுத் தலைவராகியுள்ளார். அடையாளமுள்ள ஒரு தேசிய இனம் எவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை உளப்பூர்வமாக உணரக்கூடிய ஒரு தலைவராக அநுரகுமார இருப்பார் என்றே நான் கருதுகின்றேன்.




நீங்களும் வியர்வையும் இரத்தமும் சிந்தி 56 ஆண்டுகளுக்கு பின்னர் ஆட்சி பீடம் ஏறியுள்ளீர்கள். வரலாறு யாரையும் காத்திருக்க வைப்பதில்லை. அதேபோல் தமிழர்கள் சிந்திய இரத்தத்திற்கும் கண்ணீருக்கும் வரலாறு நிச்சயம் ஒரு வாய்ப்பைக்கொடுக்கும். அந்த வாய்ப்பை புரட்சியாளரான அநுரகுமார எவ்வாறு கையாளப்போகின்றார் என்ற விடயத்தைத்தான் நாம் பார்க்கின்றோம்.

இந்த நாட்டில் எங்கு தோண்டினாலும் எலும்புக்கூடுகள்தான் வருகின்றன. மனிதப்படுகொலைகள் நடைபெற்ற மனிதப்புதைகுழிகள்நிறைந்தநாடாகவேஇலங்கை உள்ளது. செம்மணியில் செவ்வாய்க்கிழமை வரை 80 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால்இதுவரை இதற்கானநீதிவிசாரணைக்கான கதவு திறக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

குறிப்பாக யாழ் மண்ணில் 2003 ஆம் ஆண்டுக்கு மேற்படட காலத்தில் அப்போதிருந்த கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் ஒரு குழு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினுடைய ஆதரவோடு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கை கவனத்தில் எடுக்கப்படாது கிடப்பில் போடப்பட்டுள்ளது. அறிக்கை விபரம்கூட வெளிவரவில்லை. 2003. 10. 28 ஆம் திகதி இந்த நாட்டின் தலைவர்களிடம் அதனைக் கொடுத்திருந்தார்கள். ஆனால் எந்த தீர்வும் யாருக்கும் கிடைக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின், அரசுத் தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன . நாட்டில் ஒரு தீர்வைப் பற்றி யோசிப்பதற்காக யாருமே சிந்திக்கவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தம் வந்தபோது ஜே .ஆர். ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சியால் அந்த ஒப்பந்தம் ஒரு நீதியான தீர்வை கொண்டு வருவதற்கான பாதையை திறக்கவில்லை.

அதேபோல் 2010 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச இந்த நாட்டின் அரசுத் தலைவராக இருந்தார். போரை முடித்துவைத்த மன்னனாகவே அவர் பார்க்கப்பட்டார். ஆனால் அவருக்கு கிடைத்த, இலங்கையில் யாருக்குமே கிடைக்காத அந்த அருமையான வாய்ப்பை அவர் தன்னுடைய, இயலாமை, இனவாதம் காரணமாகத்தவறவிட்டார். அதனை இல்லாமல் செய்தார். அதனால் இன்று அவரும் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றார்.

இந்த நாட்டின் தலைவர்களுக்கு அரிய வாய்ப்புக்கள் கிடைப்பதுண்டு.இன்றும்கூட அநுரகுமாரவுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. 159 எம்.பி.க்களை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள். குறிப்பாக 2005ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் திகதிக்கு முதல் சுனாமி கட்டமைப்பிலிருந்து விலக வேண்டுமென அப்போதைய தலைவர் சோமவன்ச தலைமையிலான ஜே.வி.பி. கட்சி அரசுத் தலைவரான சந்திரிக்காவிடம் வலியுறுத்தியது. அந்தக் கட்டாயப்படுத்தலுக்கு சந்திரிகா பணியாததால் 16 ஆம் திகதி சந்திரிகா அரசிலிருந்து ஜே .வி.பி. வெளியேறியது. 39 எம்.பி க்களை கொண்டிருந்த ஜே .வி.பி. 5 காரணங்களை முன்னிறுத்தி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையிலானசுனாமி பொதுக்கட்டமைப்பை உடைத்தெறிந்தது.

இருந்தாலும் இங்குள்ள ஜே .வி.பி. தோழர்கள் போராளிகள். வரலாறு உங்கள் 50 வருடங்களுக்கு பின்னர் ஆட்சிக்கு கொண்டுவந்துள்ளது. இதே போன்று தமது மண்ணில் போராடியவர்கள் மாவீரர்களாக துயிலும் இல்லங்களில் உறங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த துயிலும் இல்லங்களுக்கு மேலால் இராணுவம் முகாம்கள் அமைத்து தமது சப்பாத்து கால்களுடன் நடந்து திரிகின்றது. உதைபந்தாட்டம் விளையாடுகின்றது. இவ்வாறான நிலையில் எப்படி சகோதரத்துவம் வரும்? உங்களுக்கும் எங்களுக்குமான உறவு எப்படி நீடிக்கும்? நீங்களும் நாங்களும் இந்த நாட்டு பிரஜைகளாக எவ்வாறு ஒன்றாக கைகோர்க்க முடியும்? தயவு செய்து சிந்தியுங்கள்.

நாங்கள் எதற்கும் புறம்பானவர்கள் அல்லர். யாரையும் தள்ளி வைத்து பார்க்கவில்லை. ஒற்றுமையைவாழவேவிரும்புகின்றோம். ஆனால் நாங்கள்நாங்களாக, தமிழர்கள் ஒருதேசிய இனமாக, எனக்ளுக்கே உரித்தான இறையாண்மையின் அடிப்படையில் வடக்கு,கிழக்கிலுள்ள எமது பூர்வீக மண்ணில் வாழ்கின்ற உரிமையோடு இருப்பதற்கான உத்தரவாதத்தையே நாம் கேட்கின்றோம். இந்த உத்தரவாதம் கிடைக்காத வரைக்கும் இந்த நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு. ஒற்றுமை எவ்வாறு வர முடியும்?

பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தனை கைது செய்து சிறையில் வைத்துள்ளீர்கள். அவர் சேட்டை குற்றங்களுக்கு தண்டனை அனுபவிக்க வேண்டும். நாம் அதற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை மையமாக வைத்து அவர் விசாரிக்கப்படுகின்றார். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடந்தது 2019.05 21 ஆம் திகதி அதேமாதம் 27 ஆம் திகதி முன்னர் இந்த நாட்டில் பாதுகாப்பு செயலாளராகவிருந்த கோட்டபாய ராஜபக்ஷ ரொய்ட்டர் செய்தி சேவைக்கு “இஸ்லாம் மதத்தினால் இந்த மண்ணில் எவ்வாறு தீமை நடக்கபோகின்றது, இ0ஸ்லாம் இந்த நாட்டை எவ்வாறு அழிக்கப்போகின்றது .இதற்கு பின்னால் யார் இருந்தார்கள்“ என்பதனை சொல்கின்றார். ஆகவே பிள்ளையான் ஒரு கருவி மட்டுமே. கர்த்தாக்களான கோத்தபாய ராஜபக்ச ஏன் இந்த நாட்டில் இன்னும் விசாரிக்கப்படவில்லை? .2019-05-27 ஆம் திகதி ராய்ட்டர்செய்தி சேவைக்கு கோத்தபாய ராஜபக்ச வழங்கிய பேட்டியை நான் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்

வடக்கு, கிழக்கு என்பது தமிழர்களின் அபிவிருத்திக்கான பிரதேசம் .ஆனால் அபிவிருத்தி செய்ய நீங்கள் பின்னடிகின்றீர்கள். தமிழர்கள் அபிவிருத்தியில் முன்னுக்கு வந்துவிடுவார்கள் எனப்பயப்படுகின்றீர்களா? 42 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் வர்த்தகத்துறையில் தமிழர்கள் செலுத்திய ஆதிக்கத்தை அழிக்கவே ஜே.ஆர்.ஜெயவர்த்தன கறுப்பு ஜூலை கலவரத்தை திட்டமிட்டு ஏற்படுத்தினார். தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்தார், நாம் மீண்டும் கேட்கின்றோம் இந்த நாட்டுக்குள் நாங்கள் நாங்களாக வாழ ஏன் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய முடியாது? தலைமன்னாருக்கும் இராமேசரத்துக்குமிடையில் ஏன் பாலம் அமைக்க முடியாது?

இந்த நாட்டில் உள்ளவர்களிடம் நல்ல எண்ணங்களை காணமுடியாதுள்ளது. அநுரகுமார அரசுத் தலைவராக பதவியேற்று 304 நாட்களாகிவிட்டன. அரசியல் ரீதியாக புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கானதீர்வுஎன்னஎன்பதனைஇன்னும் முன் வைப்பதற்கான தயார் நிலை, அதுபற்றி பேசுவதற்கான வாய்ப்பு இந்த ஆளும்தரப்பால் கொண்டுவரப்படவில்லை. வடக்கில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்கள் இன்னும் உறவினர் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் உள்ளனர். ஆனால் இங்கிருந்து சிலர் சகோதரத்துவ ரயிலில் அங்கு போகின்றார்கள். ஒரு சிங்கள தேசிய இனத்துக்குரிய அடையாளங்களை நாம்ஏற்றுக் கொள்வதுபோல் தமிழனத்திற்கான அடையாளங்களை நீங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.என்றார்

## பிரதம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் பல உயர்மட்ட வழக்குகளுக்கும் தலைமை தாங்கியுள்ளதோடு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளபொலிஸ்மாஅதிபர்தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேநேரம் தற்போது பதவியில் உள்ள பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இம்மாதம் 27ஆம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவும் குறித்த குழுவுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேற்படி அரசுத் தலைவர் செயலகத்தில் விசேட விசாரணைக் குழுவை அரசுத் தலைவர் நேற்றுமுன்தினம் (22) பிற்பகல் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனம்மற்றும்வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் என்பவற்றில் நடந்த முறைகேடுகள் குறித்து முறையான விசாரணை நடைபெறாததால் இந்த நிறுவனங்கள் பாரியளவில் செயலிழந்துவிட்டதாக அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்துவிடயங்களையும் ஆராய்ந்து துரிதமாக விசாரணையை நடத்தவும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான வழிகாட்டுதல்கள் அடங்கிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவும் அவர் குழுவுக்கு அறிவித்தார்.

இந்த விசேட விசாரணைக் குழுவிற்கான நியமனக் கடிதங்களை அரசுத் தலைவர் யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அரசுத் தலைவர் அலுவலகத்தில் குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

அதன்படி இந்த அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழுவின் செயலாளர்/ஒருங்கிணைப்பாளராக அரசுத் தலைவர் யின் மேலதிகச் செயலாளர் கே.என்.எம். குமாரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் எச்.எம். காமினி விஜேசிங்க, ஓய்வுபெற்ற மேலதிகச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஞானசிறி சேனநாயக்க,

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் துஷாந்த பஸ்நாயக்க, சடத்தரணி தொன் சுமிந்த ஜே. அதுகோரல, அரச தொழில்முயற்சிகள் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் என்.ஏ.எச்.கே. விஜேரத்ன ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் என்பன தொடர்பாக 2010-2025 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் அதிகாரதுஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோதமாக சலுகைகளைப் பெறுதல்,

சேவை ஒப்பந்தங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு வழங்குவதில் இடம்பெற்ற முறைகேடுகள், விமான சேவை பாதுகாப்பு செயற்பாடுகளில் பலவீனங்கள் சுங்கத்தீர்வையற்ற கடை கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிநாடுகளில் விற்பனை முகவர்களின் கொடுக்கல்வாங்கல்கள்மற்றும்சம்பவங்களில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் சீரான செயல்பாட்டை மோசமாக பாதித்த நிர்வாக ரீதியான தவறுகள் ஊழல் மற்றும் முறைகேடுகள் மற்றும் அல்லது வெளித் தலையீடுகள்,

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் 2000முதல்2025வரையான காலப்பகுதியில் விமானங்கள் மற்றும் பத்து மில்லியன் ரூபாவுக்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் அல்லது குத்தகைக்கு எடுத்ததில் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல்,

ஜே.சி. வெலியமுன குழு அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட விசாரணை அறிக்கை ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ள தவறான முடிவுகள் மற்றும் மோசடி ஊழல் மற்றும் முறைகேடுகளுக்குப்பொறுப்பானதரப்பினரை அடையாளம் காண்பது,

அவற்றைச் சீர்செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதும் எதிர்காலத்தில் இதுபோன்றநிலைமைகள்மீண்டும்நிகழாமல் தடுக்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதும் இந்த அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழுவின் பணியாகும்.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்றையதினம் 18ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது அதன் போது இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் 05 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 27 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றையதினத்துடன் 67 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த மூன்று தினங்களிலும் 20 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## வாகன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை நேற்று முன்தினம் செவ்வாயன்று நடைபெற்ற மத்திய வங்கியின் நாணயச்சபைக்கூட்டத்தில் ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 சதவீதம் எனும் தற்போதைய மட்டத்திலேயே பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமகால உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைவரங்களைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு இத்தீர்மானம் எதிர்வருங்காலத்தில் பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்தை நோக்கி வழிநடத்துவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

அதேபோன்று பணவீக்கமானது இக்காலாண்டில் நேர்மறையாகத் திரும்பலடையும் எனவும், பின்னர் 5 சதவீதம் எனும் இலக்கினை நோக்கி வலுவாக உயர்வடையும் எனவும் மத்திய வங்கி எதிர்வுகூறியுள்ளது. அதேபோன்று இக்காலப்பகுதியில் மையப்பணவீக்கமானது பொருளாதாரக் கேள்வி நிலைமைகளின் நிலையானமீட்சியைப்பிரதிபலிக்கும்வகையில் அமைந்திருப்பதாகவும், அது எதிர்வரும் மாதங்களில் படிப்படியாகத் தொடர்ந்து அதிகரிகவும் எனவும் மத்திய வங்கியின் எதிர்வுகூறலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நாட்டின் பொருளாதாரம் இவ்வருடத்தின் முதலாம் காலாண்டில் 4.8 சதவீதம் கொண்ட உறுதியான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிவேகம்எதிர்வரும்காலங்களிலும் தொடரும் என பொருளாதாரக் குறிகாட்டிகள் காண்பிக்கின்றன. அண்மைய கொள்கை வட்டிவீதக் குறைவுக்குப் பதிலிறுக்கும் வகையில் அநேகமான சந்தை வட்டிவீதங்கள் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளன' என்றும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் உலகளாவிய ரீதியில் மாற்றமடைந்துவரும் வர்த்தக நிலைவரம் மற்றும் புவிசார் அரசியல் முரண்பாடுகள் என்பவற்றின் காரணமாக கொள்கைசார் நிச்சயமற்றதன்மைதீவிரமடைந்திருப்பதாகவும், இதுகுறித்து நாணயச்சபை உன்னிப்பாகக் கண்காணிக்கும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## தேசபந்துவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பின் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் பதவி அதிகாரங்களை பாரதூரமான வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சபைக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

இதன்படி ஜூலை 22ஆம் திகதி சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையின் ஆங்கில பிரதி அன்றைய தினமே நாடாளுமன்ற இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையை அச்சிட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அறிக்கையின்படி தேசபந்து தென்னக்கோன் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2001/05ஆம் இலக்க பதவிநிலைகளைநீக்குதல் தொடர்பான ஏற்பாடுகளுக்கமைய 17ஆம் சரத்தின் பிரகாரம் அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான யோசனையை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 27க்கு அமைய இந்த யோசனை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு 5 நாட்களின் பின்னர் இது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுவதுடன், அது தொடர்பில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவினால் தீர்மானிக்கப்படும் நாளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும்.

இதன்படி நாடாளுமன்றத்தில் சமூகமளிக்காத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் அவரை பதவி நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அரசுத்தலைவர்க்கு அறிவிக்கப்படும் என்றார்.

## கறுப்பு ஜூலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை (ஜூலை 23) கறுப்பு ஜூலையாக அனுஷ்டிக்கின்றனர். 1983இல் வடக்கு, கிழக்கிற்கு வெளியே தமிழர்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக கொழும்பில் பலர் கொல்லப்பட்டனர். இராணுவ மற்றும் பொலிஸாரின் தலைமையில் அரச உதவி பின்னணியில் தமிழ் குடும்பங்கள் உயிருடன் எரிக்கப்பட்டன. அது மறக்க முடியாத சம்பவங்கள். சிங்களவர்களிடையே இருந்த நல்லவர்கள் தமிழர்களை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்தனர். அந்தச் சம்பவங்கள் இடம்பெற்ற நாளையே தமிழர்கள் அனுஷ்டிக்கின்றனர்.

எனினும் இன்னும் இதனை அனைவரும் அனுஷ்டிக்கும் பொதுவான நாளாக அறிவிக்க முடியவில்லை. அதேபோன்று இதுவரையில் இன்னும் எந்த அரசும் உத்தியோகபூர்வமாக மன்னிப்பு கோரவும் இல்லை. தற்போதைய ஆளும்தரப்பின் ஏற்பாட்டில் இளைஞர்கள் குழு தெற்கில் இருந்து இந்த நாளை நினைவுகூர்ந்து வடக்கிற்கு செல்கின்றனர். ஆனால் முற்றிலும் அனுஷ்டிப்பு நாளை மாற்றியமைக்கும் வகையில் இது அமைகின்றது.

ஜே.வி.பியும் இதில் குற்றவாளிகளே. கறுப்பு ஜூலையை வரலாற்றில் இருந்து மறைக்க முயற்சிக்கின்றனர். ஆனால் அதனை மறைக்க முடியாது. இதுவரையில் எவரும் உத்தியோகபூர்வமாக மன்னிப்பு கோரவில்லை என்பதனை குறிப்பிடுகின்றோம். அதற்கான நீதி கிடைக்கவில்லை. அதற்காக எதுவும் நடக்கவில்லை.

ஏன் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டியேற்பட்டது என்பதனை பாருங்கள். அதனை பயங்கரவாதம் என்று கூற முடியாது. அவ்வாறு நான் கூற மாட்டேன். பாதுகாப்புக்காக மக்கள் அதனை செய்ய வேண்டியிருந்தது. ஆனால் நீங்கள்தான் பயங்கரவாதம் போன்று செயற்பட்டீர்கள்.

இதேவேளை, வலிகாமம் வடக்கு மக்கள் கொழும்பில் அரசுத் தலைவர் செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிலர் செயலகத்திற்குள் சென்று கலந்துரையாட அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களது சொந்த நிலங்கள் 2013ஆம் ஆண்டில் 6370 ஏக்கர் காணி இராணுவ தேவைகளுக்காக வர்த்தமானி மூலம் சுவீகரிப்பதற்காக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சர்வதேச அழுத்தங்களால் 3000 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது.

மேலும் 3000 ஏக்கர் காணி நிரந்தரமாக உயர்பாதுகாப்புவலயமாக விடுவிக்கப்படாமல் இருக்கின்றது. இது நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிரானது. அவ்வாறு கையகப்படுத்தியுள்ள 75 வீதமான காணிகள் இராணுவ தேவைக்காகப் பயன்படுத்தப்படவில்லை. அங்கே இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன விவசாயம் செய்கின்றன.

6 ஆலயங்களும், தேவாலயங்களும் அந்த பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்தன. அவை அழிக்கப்பட்டுள்ளன. போர் யுத்தம் நடக்கவில்லை. யார் அவற்றை அழித்தது. இவை யுனேஸ்கோ குற்றமாகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான நீதியை தடுக்கும் ‘பிக்பொஸ்’ மீதும் கவனம் தேவை

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. காரியப்பர் அழுத்தம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய “பிக்பொஸ்“ யார் என்பது தொடர்பிலும், அந்த தாக்குதல் தொடர்பான நீதியை நிலைநாட்டவிடாமல் தடுக்கும் “பிக்பொஸ்“ யார் என்பது தொடர்பிலும் ஆளும்தரப்பு அவதானம் செலுத்த வேண்டுமெனஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான அரசுத் தலைவர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதானவிவதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த நாள் முதல் வெளிவராததகவல்கள் தொடர்பில் முதற்தடவையாக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 2024 நவம்பர் 24ஆம் திகதி முன்வைக்கப்பட்ட பி அறிக்கையின் ஊடாகவே வெளிவந்தன. இதில் முதல் அறிக்கையாக சனல் 4 அலைவரிசைக்கு வழங்கிய அசாத் மௌலானவினால் வெளியிடப்பட்ட தகவல்களாகும்.

அடுத்ததாக ஆயர் சிறில் காமினிக்கு கிடைத்த வட்ஸ்அப் தகவலாகும். இந்த சாட்சிகளுக்கமைய இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர். சிவனேசதுரை சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையானும், சுரேஷ்சாலே என்பவருமே ஆகும். ஆனால் இன்றுவரை இவர்களை கைது செய்வதற்கோ, இவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவோ அவர்களை சந்தேக நபர்களாக கைது செய்வதற்கோ குற்றப்புலனாய்வு பிரிவுக்கு முமுடியாமல் போயிருக்கிறது. அத்துடன் சாரா என்பவர் இறந்துவிட்டதாக காட்டுவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் இதில் முக்கியமானதாக வவுனதீவில் பொலிஸ்உத்தியோகத்தர்கள் இருவர் கொல்லப்பட்டு அவர்களின் ஆயுதங்கள் கொல்லையடிக்கப்பட்டமை தொடர்பிலும் அந்த ஆயுதங்கள் சஹ்ரான் குழுவினரால் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த பி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் புலனாய்வுபிரிவு அறிக்கையொன் றையும் முன்வைத்துள்ளது. அதில் உளவுத்தகவல்களை வழங்குபவர் ஒருவரின் பெயரும் உள்ளது.

அவர் தகவல்களை வழங்கியும் புலனாய்வு படையின் கட்டளை அதிகாரி உள்ள சிலரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் அந்த தகவல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்படி செயற்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்திருக்கலாம். இதன்படி உளவு வழங்கியவரின் தகவல்கள் உண்மையானது என்றும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ள போதும் இது வரையில் அந்த புலனாய்வு அதிகாரிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. இதில் தமிழ் மொழிபெயர்ப்புக்காக சென்ற அப்பாவி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு படை கட்டளை அதிகாரி நாடாளுமன்றத்திற்குள் இருக்கின்றார்.

இதேவேளை கடந்த ஜனவரி 7ஆம் திகதி அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் கூறுகையில், நாங்கள் அந்த விசாரணைகளை புதிதாக ஆரம்பித்துள்ளதாக தெரிவித்திருந்தார். விசாரணைகளுக்கமைய 12 சிவில் சாட்சியாளர்களும், 7 இராணுவ உறுப்பினர்களும், 26 பொலிஸாரும் அடங்கலாக 48 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

ஆனால் கிழக்கு மாகணத்தின் புலனாய்வு அதிகாரி, கட்டளை அதிகாரி ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுவதை தடுப்பது யார்? நீதிமன்றத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காக செல்வதை தடுப்பவர்கள் யார்? யார் அந்த பிக் போஸ், இந்த கள்வர்களை, பயங்கரவாத நடவடிக்கைகளை திட்டமிட்டவர்கள் இராணுவத்தின் அதிகாரங்களை பயன்படுத்தி சஹ்ரானை பயன்படுத்தி தங்களுக்கு தேவையான அரசியல் நாடகங்களை செய்வதற்காக இந்த வேலைகளை செய்யும் அந்த பிக் போஸ் யார்?

2018 ஒக்டோபர் 26ஆம் திகதி அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கினார். 2018 நவம்பர் 9ஆம் திகதி வீரவிக்கிரம விபூசன மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, இரண்டு வாரங்களில் கிழக்கு மாகாணத்தின் இராணுவ கட்டளை தளபதியாக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் 3 வாரங்களில் வவுனதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இறந்தனர். அதன்போது முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் அதனை செய்தது போன்று நாடகமொன்றை முன்னெடுக்க முயற்சித்தனர். அந்த நாடகத்தை இராணுவ புலனாய்வு பிரிவே தயாரித்தது.

இதேவேளை, அருண ஜயசேகர 87/89 காலப்பகுதியில் ஜே.வி.பிக்கு எதிராக இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டவர். அவருக்கு அதற்கான பதக்கமும் உள்ளது. மஹிந்த ராஜபக்ச பிரதமராக இருந்தபோது கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரியாக இருந்துள்ளார்.

2019 நவம்பரில் ஓய்வுபெற்ற அவர், 2023ஆம் ஆண்டில் நீங்கள் ஆளும்தரப்பிற்கு வரப்போகின்றீர்கள் என்றதும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் சங்கத்தில் இணைந்தார். தேசிய மக்கள் சக்தியில் இணைந்து தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்து பிரதி பாதுகாப்பு அமைச்சராகியுள்ளார். எப்படி இவர் இந்த இடத்திற்கு வந்தார்? இதனை செயற்படுத்தும் ‘பிக் பொஸ்’ யார் என்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு கோருகின்றேன் என்றார்.

# ஐ.நா. நிபுணர்கள் குழுவின் மேற்பார்வையில் செம்மணி புதைகுழியை தோண்டவேண்டும்

## கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி, கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக் கூட்டத்தில் நேற்று செம்மணி மனிதப் புதைகுழியை ஐ.நா பேரவையின் நிபுணர் குழு மேற்பார்வை செய்ய வலியுறுத்திபிரேரணைஏகமனதாகநிறைவேற்றப்பட்டது. கறுப்பு ஜூலை 23 நினைவை கூர்ந்தும், செம்மணியில் படுகொலைசெய்யப்பட்டவர்கள், கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்ந்தும் மின் விளக்குகளை அணைத்து, மெழுகுவர்த்தி ஏந்தி கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர். ஆளும் கட்சியான தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் கையில் கறுப்பு துணி கட்டி சபைக்கு வருகை தந்திருந்தனர்.

வடமராட்சிதெற்குமேற்குகரவெட்டிபிரதேசசபையில் சபை அமர்வு நேற்றுக் காலை 9.00 மணியளவில் தவிசாளர் சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளை வலுப்படுத்தும் விதமாக தவிசாளர்னால் முன் மொழிவு மேற்கொள்ளப்பட்டது.

1) செம்மணி உள்ளிட்ட மனித புதைகுழி தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்பு கூறல் செயல் திட்ட அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள்ளிட்டை வழங்கவும் காணிப்பில் ஈடுபடவும் இலங்கை ஆளும்தரப்பு அனுமதிக்க வேண்டும்.

2) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 46/1 தீர்மானத்திற்கு அமைய இனப்படுகொலை யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் கீழியங்கும் இலங்கை பொறுப்பு கூறல் செயல் திட்ட அதிகாரிகள் தங்கு தடையற்ற வசதிகளை ஆளும்தரப்பால் வழங்கப்படவேண்டும்.

3) மனித புதைகுழி அகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தமது சமூகத்தின் வளங்களை பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளிட்டை பெற்றுக்கொள்ள இலங்கை ஆளும்தரப்பு அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்கப்படவேண்டும்.

4)புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றதால் கோரப்படும் அனைத்து நிதிக் கோரிக்கைகளையும் இலங்கை ஆளும்தரப்பு நிறைவேற்றவேண்டும்.

5) இதுவரை வெளிவந்த தகவல்களின் பிரகாரம் அனைத்து புதைகுழிகளிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்விற்கு இலங்கை ஆளும்தரப்பு அனுமதிக்கவேண்டும்.

6)இலங்கையில் பொறுப்பு கூறல் விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஊடாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு விடயம் பாரபடுத்தப்பட்டு அதன் ஊடாக சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றை சாத்தியப்படுத்துவதற்கான வேலைப்பாட்டை ஐ.நா மனித உரிமை ஆணையாளர், எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் முடுக்கி விட வேண்டும் என தவிசாளர் முன்மொழிவை வைத்தார்.

இதனை உறுப்பினர் கந்தன் பரஞ்சோதி வழி மொழிய சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினர் பா.அஜந்தன் தெரிவிக்கையில் மக்களின் கஷ்டங்கள்பற்றிகூறப்பட்டிருக்கிறது. இதுபிரேரணையின் முதலாவதாக போட்டிருக்க வேண்டும். ஆனால் 18ஆவது பிரேரணையாக போட்டிருக்கின்றது. இதனை முதலாவது பிரேரணையாக கொண்டு வந்து பதிவு செய்யப்படவேண்டும். நமது பிரதேச சபை ஆவணத்திலும் ஆவணப்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

# கடவுச்சீட்டுக் குறியீட்டில் இலங்கை முன்னேற்றம்

இலங்கைகடவுச்சீட்டானது ஹென்லே (Henley) கடவுச்சீட்டுக் குறியீட்டில் 5 இடங்கள் முன்னேறியுள்ளன.

அதன்படி, இலங்கை கடவுச்சீட்டானது குறியீட்டு புள்ளிகளுக்கு அமைவாக 96ஆவது இடத்திலிருந்து 91ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இலங்கை கடவுச்சீட்டு கடந்த வருடத்தில் 4 இடங்கள் முன்னேறி இருந்தது.

ஹென்லே கடவுச்சீட்டு குறியீடானது, இந்த வருடத்தில் முன் விசா இல்லாமல் தங்கள் நாட்டு குடிமக்கள் எத்தனை இடங்களுக்குச் செல்லலாம் என்பதன் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப்படுத்தி வருகிறது.

அதன்படி, உலகம் முழுவதும் 42 இடங்களுக்கு இலங்கையர்கள் விசா இல்லாத அணுகலைப் பெற முடியும்.

சிங்கப்பூர் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 193 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்லலாம், அதே நேரத்தில் ஜப்பான் மற்றும் தென் கொரிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 190 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்வதற்கு அனுமதிக்கிறது.

இதேவேளை, குறியீட்டில் 8 இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா, 85ஆவது இடத்திலிருந்து தற்போது 77ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

பாகிஸ்தான், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை குறியீட்டில் கடைசி நான்கு இடங்களைப் பிடித்துள்ளன.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2025இல் வெளியிடப்பெற்றது